STC.No.1203/2019 Date:06.10.2022

ம.சா.1 ஆனந்தகுமார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

1.) எதிரியிடம் எத்தனை முறை அவரது அலுவலகம் சென்று பணம் கேட்டேன் என்றால் போன் மூலம் தான் கேட்டேன் நேரில் சென்று கேட்கவில்லை. மேற்படி கேஷ் கம்பெனி யார் பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எதிரியின் அப்பா எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பணம் கொடுக்கும்போது எதிரிக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 20 முதல் 25 வரை இருக்கலாம். எனக்கு எதிரியை நேரிடையாக தெரியாது என்றும், புஷ்பா என்பவரின் பினாமியாக செயல்பட்டு இந்த பொய்யான வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) எதிரி என் மீது சங்ககிரி, சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 198/2019 வழக்கு தாக்கல்செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் ஓட்டுனராக உள்ள லாரியின் உரிமையாளர் மற்றும் பதிவு எண் என்னவென்றால் , கணேசன் என்பவர் உரிமையாளர், பதிவு எண். TN 52 F 4621 . நான் அவ்வாறு ஓட்டுனராக பணியாற்றவில்லை என்றால் சரியல்ல. காசோலை என்ன மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் ஊதா நிற மையினால். காசோலையை பூர்த்திசெய்து கொண்டுவந்தாரா என்றால் ஆமாம்.

3) உண்மையில் காசோலை கொடுத்திருந்தால் என் முன்பாகத்தான் பூர்த்திசெய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் நேரிடையாக எந்த பழக்கமும் இல்லை என்றும், புஷ்பா என்பவரிடமிருந்து காசோலை பெற்று மோசடி செய்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

S R BABU Digitally signed by S R BABU Date: 2022.10.06 18:09:50 +0530

Sd/- Ananthakumar

Judicial Magistrate No.1,
Sankari.